Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ் Mirror

TUESDAY, FEBRUARY 27, 2024

செவ்வாய்க்கிழமை பெப்ரவரி 27, 2024 | ஒளி: 09 கதிர் 200 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

சபாநாயகர் மீது

# “நம்பிக்கை இழந்துள்ளோம்”





நமது நாட்டின் ஜனநாயக கட்டமைப்பில் நிறைவேற்று, சட்டமன்றம் மற்றும் நீதித்துறை ஆகிய 3 முக்கிய தூண்கள் செயல்படுகின்றன. சட்டங்களை ஏற்றுக்கொள்வது சட்டமன்றத்தின் மூலம் செயல்படுத்தப்படுவதோடு, அதன் சட்ட மற்றும் அரசியலமைப்பு அமுலாக்கம் சபாநாயகர் தலைமையிலான அதிகாரிகளின் பொறுப்பாகும். நிகழ்நிலை காப்பு சட்டம் சட்டவிரோதமான முறையிலேயே இன்று சட்டமாக மாறியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் திங்கட்கிழமை (26) கையெழுத்திட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த சட்ட வரைவு குறித்து உயர் நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகள் மற்றும் தீர்ப்புகளை முற்றிலுமாக நிராகரித்து, சபாநாயகர் தலைமையில் இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டு, அவர் கையெழுத்திட்டு, உயர் நீதிமன்றத்தின் உயர் சட்டத்தை மீறி சட்ட விரோதமான முறையில் இதை நாட்டின் சட்டமாக்கியுள்ளார். இதன் மூலம் சபாநாயகர் அரசியலமைப்புச் சட்டத்தையும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளையும் மீறியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், சபாநாயகர் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உயர் சட்டத்தைப் பின்பற்றி, சட்டங்களைச் சரியாகவும் முறையாகவும் நிறைவேற்ற வேண்டும். அதை அவர் வேண்டுமென்றே மீறினார் என்றும் நிகழ்நிலை காப்பு சட்டத்தை நிறைவேற்றும் நடவடிக்கையில் சபாநாயகரின் செயல்பாடுகள் குறித்து அதிருப்தி தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அவர் மீதான நம்பிக்கை அற்றுப்போயுள்ளது.

தாம் உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல தடவைகள் சபைக்கு உள்ளேயும் வெளியேயும் இந்த தவற்றைச் சரி செய்யுமாறு முன்மொழிவுகளைச் சமர்ப்பித்த போதும், அந்த பிரேரணைகளை வேண்டுமென்றே நிராகரித்ததன் மூலம் அவர் அத்தகைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் இல்லை என்பதனால் நாம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளோம். அடுத்த கட்சித் தலைவர் கூட்டத்தில் இது குறித்து கலந்துரையாடப்பட்டு, அதன் பின்னர் இவ்விவகாரத்தை உடனே விவாதத்திற்கு எடுத்து பதவியில் இருந்து அவரை நீக்க நடவடிக்கை எடுப்போம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்துள்ளார்.



# 2,000 ரூபாவுக்கு விற்பனையாகும் இளநீர்

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இலங்கையின் இளநீருக்கு அதிக கேள்வி காணப்படும் நிலையில், அங்கு இளநீர் ஒன்றின் விலை 2,000 (இலங்கை ரூபாவில்) ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

தொடர்ச்சி P2



## மாணவர்களுக்கு விசேட அறிவுறுத்தல்

நாட்டில் நிலவும் அதிக வெப்பநிலை தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு சுகாதார அமைச்சு சில அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

## “ஆபத்தில் முடியும் அறுவை சிகிச்சைகள்”

நாட்டில் பயிற்சி பெற்ற மருத்துவர்களின் தலையீடு இல்லாமல் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை செய்வது உயிருக்கு ஆபத்தாகிவிடும் என பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை வைத்திய நிபுணர்களின் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

சிறுமியை காதல் வலையில் வீழ்த்தி

## நிர்வாண படங்களை பதிவிட்ட யுவதி



அனுராதபுரம் - கலென்பிந்துனுவெவ பகுதியில் இளைஞராக வேடமிட்டு 15 வயது சிறுமியுடன் காதல் உறவில் ஈடுபட்டு, அவரது நிர்வாண புகைப்படங்களை சமூக ஊடகங்களில் பதிவிட்டதாக கூறப்படும் 19 வயதுடைய யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த யுவதி சமூக ஊடகத்தில் அறிமுகமான, மாத்தறை பிரதேசத்தை சேர்ந்த 15 வயது சிறுமியிடம் தன்னை இளைஞராக காண்பித்து, கடந்த ஒரு வருட காலமாக காதல் உறவில் ஈடுபட்டிருந்துள்ளார்.

மேலும், இவர் இளைஞர் ஒருவரின் குரலில் தொலைபேசி மூலம் சிறுமியுடன் தினமும் தொடர்பு கொண்டு

தொடர்ச்சி P2

சிறுநீரக நோயாளர்களின் மரணம்:

## இரசாயனத் தாக்கம் என சந்தேகம்

குருநாகல் போதனா வைத்தியசாலையில் சிறுநீரக நோயாளர்களுக்கான டயாலிசிஸ் சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகள் திடீரென உயிரிழந்தமைக்கு சிகிச்சைக்காக வழங்கப்பட்ட இரசாயனத்தின் தாக்கமே காரணமாக இருக்கலாம் என வைத்தியசாலையின் வைத்தியர்கள் சந்தேகப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## இலங்கையில் ‘யுனைடெட் பெட்ரோலியம்’

இலங்கையின் எரிபொருள் சந்தையின் போட்டித்தன்மையை அதிகரிக்கும் வகையில் மற்றுமொரு வெளிநாட்டு நிறுவனமான "யுனைடெட் பெட்ரோலியம்" என்ற நிறுவனம் இலங்கை சந்தையில் பிரவேசித்துள்ளது.

தொடர்ச்சி P2

## “கட்சி சார்பற்ற வேட்பாளராக களமிறங்கும் ரணில்”

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இடம்பெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க கட்சி சார்பற்ற வேட்பாளராகக் களமிறங்குவார் என ஐக்கிய தேசிய கட்சி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை (25) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, பொருளாதார நெருக்கடியில்இருந்தநாட்டை மீட்பதற்குத் தனி ஒரு கட்சியால் முடியாது. அனைவரின் ஒத்துழைப்பு அவசியம். அதனால் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இடம்பெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் மக்களுக்காக



தொடர்ச்சி P2

## “பிரேமதாசர்கள் ராஜபக்ஷர்களின் வாயிற்காவலர்கள் அல்ல”

பிரேமதாசர்கள் ராஜபக்சர்களின் வாயில் காவலர்கள் அல்லர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கடவத்தை - மஹர பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (25) இடம்பெற்ற மக்கள் அரண் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது, ஐக்கிய மக்கள் சக்தியில் வெற்றி பெறுபவர்கள் மற்றும் பின்னடைவைச் சந்தித்தவர்கள், அதே போல் அடிமட்ட தலைவர்கள், அமைப்பாளர்கள் நாட்டின் அபிவிருத்தியின் முன்னோடிகளாக ஆக்கப்படுவார்கள்.

பிரதமர், ஜனாதிபதி பதவிகளை ஏற்கும் சந்தர்ப்பம் தமக்கு கிட்டியும், தமக்கு திருடர்களுடன் டீல் இல்லாததாலயே அவ்வாறு பதவிகளை ஏற்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். ராஜபக்சர்களுக்கு ‘எஹி ஸ்வாமினி’ என்று தாம் ஒருபோதும்



தொடர்ச்சி P2

பொதுத்தேர்தல் தொடர்பில் மொட்டு கட்சியின் நிலைப்பாடு:

## வியூகத்துடன் நாடு திரும்புகிறார் பசில்



பொதுத்தேர்தலை முன்கூட்டி நடத்துவதே பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடு என்றும் அதற்கான வியூகத்துடன் பசில் ராஜபக்ஷ எதிர்வரும் மார்ச் மாதத்தில் நாடு திரும்பவுள்ளார் எனவும் ராஜபக்ஷகளின் சகோதரரான உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன அடுத்தகட்டச் செயற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, நாட்டில் நடத்தப்பட்ட அனைத்து தேர்தல்களிலும் பெருவெற்றி பெறச் செய்ததில் பசில் ராஜபக்ஷவின் புத்தி சாதுரியம் மிகவும் முக்கியமானது. அவர் நாட்டிலிருந்து வெளியேறியபோது, நாமல் ராஜபக்ஷ விடத்தில் கட்சிப்பணிகளை ஒப்படைத்துவிட்டுச் சென்றிருந்தார்.

தொடர்ச்சி P2

அரச அதிகாரிகளின் தொலைபேசிகள்

## கணக்கெடுப்பில் முக்கிய தகவல்



அரச அதிகாரிகளின் 49 சதவீதமானவர்களில் தொலைபேசி இலக்கங்கள் செயற்படாத இலக்கங்களாக உள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் நாடு முழுவதையும் உள்ளடக்கிய வகையில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு ஒன்றில் தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 2,000 ரூபாவுக்கு விற்பனையாகும் இளநீர்

ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு, இரண்டாவது இளநீர் செய்கை கிராமம் முருதவெல ரலுவ கிராமத்திற்கு அருகாமையில் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (25) நிறுவப்பட்டுள்ளது.

ஏற்றுமதிக்கு இளநீர் பயிரிடும் முதல் கிராமம் கடந்த ஆண்டு கீழ் முருதவெலியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இவ்விரு கிராமங்களிலும் 10,000 இளநீர் மரக்கன்றுகள் நடப்படவுள்ளன.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இலங்கையின் இளநீருக்கு அதிக கேள்வி காணப்படுவதாகவும், மேலும் பல நாடுகளில் இருந்து எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் இளநீருக்கு அதிக கேள்வி இருப்பதாகவும் விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

வாரத்திற்கு சுமார் 252,000 இளநீர்கள் நாட்டிலிருந்து ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டில் இளநீர் ஏற்றுமதி மூலம் இரண்டு பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதுடன், கடந்த வருடம் (2023) எதிர்பார்த்த வருமானம் ஆறு பில்லியன் ரூபாவாகும்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இளநீர் ஒன்றின் விலை இலங்கை ரூபாவின் பெறுமதிக்கு அமைய 2,000 ஆக விற்பனை செய்யப்படுகிறது.

இளநீர் இலங்கையின் பூர்வீகப் பயிராகும், பல நாடுகள் இளநீர் பயிரிட முயன்றாலும், இலங்கையில் இளநீர் போன்று அதிக சுவை இல்லாததால் அந்த முயற்சிகள் தோல்வியடைந்தன.

இதன் காரணமாக, உள்நாட்டு இளநீருக்கு உலகச் சந்தையில் இலங்கையின் ஏகபோக உரிமை இன்னும் உள்ளது.

இந்த சூழ்நிலையில் இருந்து அதிகபட்ச இளநீரை அறுவடை செய்வதற்காக, குறிப்பாக முருதவெல பிரதேசத்தில் உள்ள பல கிராமங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, இரண்டாவது இளநீர் செய்கை மாதிரி கிராமமாக ரலுவ கிராமம் நிறுவப்பட்டுள்ளதுடன் அங்குள்ள விவசாயிகளுக்கு 1,600 இளநீர் கன்றுகளை நேற்று விவசாய அமைச்சர் வழங்கி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களுக்கு விசேட அறிவுறுத்தல்

அதன்படி, அதிக வெப்பநிலை நிலவும் நாட்களில் மாணவர்கள் வெளிப்புற நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், விளையாட்டு மைதானத்தில் இல்ல விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சிகளை நடத்துவதைத் தவிர்க்குமாறும், மாணவர்களை அதிகளவில் நீர் அருந்தச் செய்யுமாறும் சுகாதார அமைச்சின் குறித்த அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் நிலவும் வறட்சியான காலநிலையில் இன்று முதல் ஓரளவு மாற்றத்தை எதிர்பார்க்க முடியுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# நிர்வாண படங்களை பதிவிட்ட யுவதி

இந்த சிறுமி தனது காதலனாக நினைக்கும் சந்தேக நபரான யுவதியிடம் தனது நிர்வாண புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை அனுப்பியுள்ளார்.

பின்னர் குறித்த யுவதி, சிறுமியை நேரில் சந்திக்க வருமாறு அழைத்துள்ளார். ஆனால் இந்த சிறுமி, யுவதியை நேரில் சந்திப்பதைத் தவிர்த்து வந்துள்ளார்.

இதனை அறிந்து கொண்ட யுவதி, தன்னை சந்திக்க வரவில்லை என்றால் சிறுமியின் நிர்வாண புகைப்படங்களை சமூக ஊடகங்களில் பதிவு செய்து விடுவதாகக் கூறி அச்சுறுத்தியுள்ளார்.

ஆனாலும் சிறுமி, யுவதியை நேரில் சந்திப்பதைத் தவிர்த்து வந்ததால், யுவதி சிறுமியின் நிர்வாண புகைப்படங்களை சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ளார்.

இதனையடுத்து, பாதிக்கப்பட்ட சிறுமி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்ததையடுத்து சந்தேக நபரான யுவதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கைது செய்யப்பட்ட போதே அவர் ஆண் இல்லை பெண் ஒருவர் என பாதிக்கப்பட்ட சிறுமி அறிந்து கொண்டுள்ளார்.

இதனையடுத்து சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் மார்ச் மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# கணக்கெடுப்பில் முக்கிய தகவல்

நாட்டின் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பிரதேச செயலகத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களைக் கருத்தில் கொண்டு இந்த கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, குறித்த இலக்கங்கள் பயன்பாட்டில் உள்ளதா? அழைக்கும் போது பதிலளிக்கப் படுகிறதா? என ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு கணக்கெடுக்கப்பட்ட 589 தொலைபேசி இலக்கங்களில் 286, அதாவது 49% சதவீதமான இலக்கங்கள் செயற்படாத இலக்கங்கள் என்று தெரியவந்துள்ளது.

22% தொலைப்பேசி இலக்கங்கள் செயற்பாட்டில் இருக்கும் போதும் பதிலளிக்கப்படவில்லை.

அழைப்புகளுக்குப் பதிலளிக்கும் சதவீதம் 29% என கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. மேலும், 98 உள்ளூராட்சி மன்றங்கள், 23 மாநகர சபைகள் மற்றும் 36 நகர சபைகளின் நிலையான தொலைப்பேசி இலக்கங்கள் இந்த ஆய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அரச சேவையில் தற்போதுள்ள வினைத்திறன் இன்மை குறித்து இந்த கணக்கெடுப்பின் முடிவுகள் மூலம் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரக் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல சுட்டிக்காட்டியுள்ளார்.

# வியூகத்துடன் நாடு திரும்புகிறார் பசில்

கட்சிக்கும், கிராமங்களில் உள்ள சாதாரண பொதுமக்களுக்கும் இடையிலான பிணைப்புக்களை வலுவாக வைத்துக்கொள்வதற்குரிய நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதோடு அவர்களின் கோரிக்கைகள், பிரச்சினைகள் சம்பந்தமாகக் கவனம் செலுத்துவது தான் நாமல் ராஜபக்ஷவின் பிரதான பணியாக இருந்தது.

இவ்வாறான நிலையில், பசில் ராஜபக்ஷ மீண்டும் எதிர்வரும் மார்ச் மாதம் நாடு திரும்பவுள்ளார். அவர் நாடு திரும்புவது, ரணில் விக்ரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதி ஆசனத்தில் அழகுபார்ப்பதற்காக அல்ல.

பொதுஜன பெரமுனவை பாதுகாக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும், கட்சியின் பெரும்பாலானவர்களின் நிலைப்பாடுகளுக்கு அமைவாகப் பொதுத்தேர்தலை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகும்.

பொதுத்தேர்தலை நடத்துவதாக இருந்தால் அதற்கான அறிவிப்பினை ஜனாதிபதியே செய்ய வேண்டும். இருப்பினும், பசில் ராஜபக்ஷ நாடு திரும்பியதும் இந்த விடயம் சம்பந்தமாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இதனடிப்படையில், பொதுத்தேர்தல் நடத்தப்படும் போது, அதற்கான வெற்றி வியூகங்களை வழங்கும் பிரதான பணியை பசில் ராஜபக்ஷவே முன்னெடுப்பார். மேலும், பெரமுனவின் உறுப்பினர்களில் சிலர் ஜனாதிபதிக்கு ஆதரவாக நிற்கின்றபோதும், முதலில் ஜனாதிபதி தேர்தலை நடத்தினால் அதில் ரணில் வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஆகவே பொதுத்தேர்தலை நடத்துவதே பொருத்தமான நகர்வாக இருக்கும்.

எவ்வாறாயினும், பசில் ராஜபக்ஷ மீண்டும் பொதுஜனபெரமுனவினைப் பதவியில் அமர்த்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்கவுள்ளார் என்றார்.

# இரசாயனத்தின் தாக்கம் என சந்தேகம்

கடந்த சில தினங்களுக்கு முன்னர் குருநாகல் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 5 நோயாளர்கள் உயிரிழந்ததைக் கருத்தில் கொண்டு, குருநாகல் போதனா வைத்தியசாலையின் டயாலிசிஸ் பிரிவைத் தற்காலிகமாக மூடுவதற்குக் கடந்த 23ஆம் திகதி அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

உயிரிழந்தமைக்கான காரணத்தைக் கண்டறியச் சுகாதார அமைச்சும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், அதற்கமைவாக இரத்த மாற்றம் மற்றும் இரத்தம் தொடர்பான நிபுணத்துவம் பெற்ற இரு மருத்துவர்கள் அடங்கிய விசாரணைக் குழுவை நியமிக்கச் சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதுதவிர, குருநாகல் போதனா வைத்தியசாலையில் டயாலிசிஸ் சிகிச்சைக்குத் திட்டமிடப்பட்டுள்ள நோயாளர்களை குளியாப்பிட்டிய, நாரம்மல, தம்பதெனிய, நிகவெரட்டிய மற்றும் நிக்கவெவ வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நோயாளிகள் அனைவரும் இரத்தமாற்று சிகிச்சையின் போது உடலில் உள்ள இரத்த பிளேட்லெட் அளவு வேகமாகக் குறைந்த பின்னர் சிக்கல்கள் காரணமாக இறந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் குருநாகல் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சந்தன கெந்தன்கமுவவிடம் வினவியபோது, நோயாளிகள் உயிரிழந்தமைக்கான எந்தவொரு குறிப்பிட்ட காரணமும் இதுவரையில் வெளியாகவில்லை என கூறியுள்ளார்.

தற்போதைய நிலைவரத்தைக் கருத்தில் கொண்டு, சிகிச்சை பெற்று வந்த ஏனைய நோயாளிகளின் பாதுகாப்பு கருதி வைத்தியசாலையில் இருந்து வெளியேற்றப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் வைத்தியர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காகச் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் குழுவொன்று திங்கட்கிழமை (26) குருநாகலுக்கு செல்ல உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# எம்.பிக்களுக்கிடையில் சந்திப்பு

ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பி ரணவக்க மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினருக்கிடையில் சந்திப்பு திங்கட்கிழமை(26) கொழும்பில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய குடியரசு முன்னணியினால் வெளியிடப்பட்டுள்ள 'தேசிய சதேய ஆறு எட எதேக்' பிரசுரத்தின் உள்ளடக்கம் குறித்து அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்களுக்குத் தெரியப்படுத்த எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இந்த சந்திப்பு இடம்பெற்றதாக பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலில், பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, கயந்த கருணாதிலக்க, முஜிபுர் ரஹ்மான், ஐக்கிய குடியரசு முன்னணியின் சார்பில் அதன் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, ஜனாதிபதி நிபுணர் கலாநிதி அஜித் அமரசிங்க, செயலாளர் நாயகம் பந்துல சந்திரசேகர, சிரேஷ்ட உபதலைவர், சட்டத்தரணி ஷிரால் லக்திலக மற்றும் தேசிய அமைப்பாளர் பொறியியலாளர் சுமேதா ரத்நாயக்க ஆகியோரும் கலந்துகொண்டுள்ளனர்.

# "கட்சி சார்பற்ற வேட்பாளராக களமிறங்கும்...



அர்ப்பணிப்புடன் வேலை செய்ய முடியுமான அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து விரவான கூட்டணி ஒன்றை அமைக்க இருக்கிறோம். அதுதொடர்பான நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. அந்த கூட்டணியில் ரணில் விக்ரமசிங்க கட்சி சார்பற்ற வேட்பாளராகக் களமிறங்குவார்.

வங்குரோத்து அடைந்திருந்த நாட்டை ரணில் விக்ரமசிங்க கட்டியெழுப்பத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும்போது, தற்போது நாட்டை பொறுப்பேற்கப் பலரும் முன்வரத் தயாராக இருக்கிறார்கள். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர்களாகக் களமிறங்க 15 பேர் வரை இருக்கிறார்கள். ஆனால் நாட்டின் பொருளாதாரத்தை யாரால் மீளக் கட்டியெழுப்ப முடியும் என்பதை மக்கள் தற்போது உணர்ந்துள்ளனர்.

மேலும் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மத்திய வங்கியே பொறுப்பாகும். இதனை நான் ஆரம்பத்தில் இருந்தே தெரிவித்து வருகிறேன். நாட்டின் நிதி முகாமைத்துவம் இருப்பது அவர்களிடமே. அவர்கள் ஏனைய துறையினருக்கு விரல் நீட்டுகிறார்களே தவிர, அவர்களின் பொறுப்பைச் செய்யத் தவறினார்கள்.

இந்நிலையில் மத்திய வங்கி அதிகாரிகள் தங்களின் சம்பளத்தை பாரியளவில் அதிகரித்துக்கொண்டுள்ளனர். இது எந்த வகையிலும் நியாயம் இல்லை. எமது காலத்தில் சாதாரண சம்பள அதிகரிப்புக்கு நாங்கள் அனுமதி வழங்கி இருந்தோம் எனதெரிவித்துள்ளார்.

# இலங்கையில் 'யுனைடட்...

குறித்த நிறுவனத்துக்கும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சகத்துக்கும் இடையே கடந்த 22ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் இயங்கி வரும் 150 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அந்த நிறுவனத்திற்கு மாற்றப்படவுள்ளதுடன் மேலும் 50 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அவர்களால் நிறுவப்பட உள்ளன.

அவர்கள் இலங்கையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக *"United Petroleum Lanka Limited"* என்ற நிறுவனத்தைப் பதிவு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# "ஆபத்தில் முடியும் அறுவை சிகிச்சைகள்"

தகுதியற்ற மருத்துவர்களால் மேற்கொள்ளப்படும் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை ஆபத்துகள் குறித்து பொதுமக்களுக்கு தெளிவுப்படுத்துவதற்காக சங்கத்தின் வைத்திய நிபுணர் குழுவொன்று ஞாயிற்றுக்கிழமை (25) செய்தியாளர் சந்திப்புக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இதன்போது, அண்மையில் கண்டியில் உள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் வயிற்றில் படிந்திருந்த 13.5 லீற்றர் கொழுப்பை அகற்றும் சத்திர சிகிச்சையானது உயிருக்கு ஆபத்தான சத்திர சிகிச்சை எனவும் வைத்தியர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

அங்கு உரையாற்றிய சங்கத்தின் வைத்திய நிபுணர் கலாநிதி அமில ஷசங்க ரத்நாயக்க,

"கண்டியில் உள்ள தனியார் மருத்துவமனையில் உலக சாதனை நிகழ்த்தப்பட்டதாக செய்தி ஒன்று வந்தது. அந்தச் செய்தியில் குறிப்பிட்ட அறுவை சிகிச்சை நிபுணர் ஒருவர் 62 வயது மூதாட்டியின் வயிற்றில் இருந்த 13.5 லீட்டர் கொழுப்பை அகற்றியிருந்தார். இந்த மாதிரி அறுவை சிகிச்சையில் 8 லீற்றருக்கு மேல் அகற்றப்பட மாட்டாது .காரணம் அது உயிருக்கு ஆபத்தானது. அது இவ்வாறு குறைக்கப்படும் அறுவை சிகிச்சை அல்ல. அது உடல் வடிவத்தை மீண்டும் பெறும் சிகிச்சையாகும். குறித்த அறுவைசிகிச்சைக்குப் பிறகு அந்த நோயாளியின் நிலைமை மிகவும் மோசமாகி மீண்டும் மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது என தெரிவித்துள்ளார்.

# "பிரேமதாசர்கள் ராஜபக்ஷர்களின் வாயிற்காவலர்கள் அல்ல"



கூறவில்லை என்றும், பிரேமதாசர்கள் ராஜபக்சர்களின் வாயிற்காப்பாளர் அல்லர். மேலும், நான் பாராளுமன்றத்தில் சாதாரண மக்களின் பிரச்சினைகள் குறித்தே பேசுகிறேன்.

தான் பாராளுமன்றத்தில் அதிகம் பேசுவதாக பொறாமைத்தனம் கொண்ட சிலர் குற்றம் சாட்டுகின்றனர். அண்மையில் தோட்ட மக்களையும் பாடசாலை மாணவர்களையும் இழிவுபடுத்தும் வகையில் கருத்து வெளியிட்ட மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் குறித்து பாராளுமன்றத்தில் கூட பேசியதால் அவர் மீது நடவடிக்கை எடுக்க முடிந்தது. நாட்டின் சாதாரண மக்களுக்காகவே தான் கேள்விகளைக் கேட்பதாக எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்துள்ளார்.

பரேட் சட்டத்தின் தளர்வு குறித்து நாம் எப்போதும் அவதானத்துடனே இருக்கிறோம்

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50% மற்றும் வேலைவாய்ப்பில் 52% பங்களிக்கும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கு எந்தவித நிவாரணமும் வழங்காமல் அரசாங்கம் பரேட் சட்டத்தைப் பின்பற்றுகிறது.

**அண்மையில் தோட்ட மக்களையும் பாடசாலை மாணவர்களையும் இழிவுபடுத்தும் வகையில் கருத்து வெளியிட்ட மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் குறித்து பாராளுமன்றத்தில் கூட பேசியதால் அவர் மீது நடவடிக்கை எடுக்க முடிந்தது**

இந்தச் சட்டத்திற்கு இடைக்காலத் தடை விதிக்க வேண்டும் என்று கூறும்போது, ஒவ்வொரு முறையும் நிதியமைச்சர் பொய்களைச் சொல்லித் தவிர்க்கிறார்கள். நிதியமைச்சரான ஜனாதிபதி இந்த விவாதங்கள் எதற்கும் வரவில்லையென்றாலும், இறுதியில் பரேட் சட்டத்திற்குத் தற்காலிக தளர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளார் என நிதி இராஜாங்க அமைச்சர் ஒருவர் கருத்து வெளியிட்டதாகவும்,

எதிர்க்கட்சி குரல் எழுப்பியதே இதற்குக் காரணம் என்றும், பரேட் சட்டத்திற்கு ஒரு தற்காலிக இடைவெளி கொடுக்கப்பட வேண்டும் என்றும்,அதேபோல் மூலதனம் வழங்கப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மின் கட்டணத்தை குறைக்க பரிந்துரை

மின் கட்டணத்தை இருபது வீதத்துக்கும் மேல் குறைக்க வேண்டும் என பாராளுமன்ற மேற்பார்வைக் குழு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

தற்போதுள்ள சூழ்நிலையின் அடிப்படையில் மின் கட்டணத்தை 33 வீதத்தால் குறைக்க முடியும் என ஆணைக்குழுவிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் மின் கட்டணத்தை 18 வீதத்தால் குறைக்க ஆணைக்குழுவிடம் மின்சார சபை முன்மொழிந்துள்ளது.

மின்சார வாரியத்தின் 18 விகிதம் மற்றும் உண்மையில் குறைக்கக்கூடிய விகிதம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, 20 விகிதத்திற்கும் மேலாகக் கட்டணங்களைக் குறைக்கக் குழு பரிந்துரைத்துள்ளது.

மேலும், துண்டிக்கப்பட்ட பிறகு மீண்டும் மின் இணைப்பை ஏற்படுத்த 3,000 ரூபாய் கட்டணத்தை 1,500 ரூபாயாக குறைக்கவும் குழு ஆணையத்திற்குப் பரிந்துரை செய்துள்ளது. இந்த பரிந்துரைகளை ஆணைக்குழு ஏற்றுக்கொண்டதாகக் குழுவின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.





## "புனரமைப்பு வேலைத்திட்டத்தை ஏப்ரலுக்குள் நிறைவு செய்க"

**எம்.எஸ்.எம்.ஸாகிர்**

அம்பாறை மாவட்டத்தில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் புனரமைக்கும் வேலைத்திட்டத்தினை எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் நிறைவு செய்யுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவர் ரவூப் ஹக்கீம், அம்பாறை மாவட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் புனரமைப்புக்குழுவைப் பணித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் புனரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பான விசேட கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (25) நடைபெற்றபோதே ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்துள்ளார் .

இதன்போது ,அம்பாறை மாவட்டத்தில் இதுவரை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் புனரமைப்பு வேலைத்திட்டம் நிறைவுபெற்ற கிராமங்களில் விரைவில் மத்தியக் குழுக்கள் அமைப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. .மேலும், இக்கூட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி செயலாளர் மன்சூர் ஏ.காதர், பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.



## ஆமையுடன் ஒருவர் கைது

**செ . கீதாஞ்சன்**

முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சட்ட விரோதமான முறையில் ஆமையினை இறைச்சிக்காகக் கொண்டு சென்ற நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

10ஆம் வட்டாரத்தினை சேர்ந்த 32 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் .

குறித்த நபர் நீண்ட நாட்களாக ஆமையினை பிடித்து இறைச்சிக்காக விற்பனை செய்து வருவது தெரியவந்துள்ளதுடன், இந்த கைது நடவடிக்கையின்போது, அவரிடம் இருந்த ஆமையும் மீட்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, சான்று பொருளையும் சந்தேக நபரையும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகப் புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### எல்பிட்டியவில் துப்பாக்கிச் சூடு:

## ஒருவர் மரணம்



காலி - எல்பிட்டிய பகுதியில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று திங்கட்கிழமை (26) இடம்பெற்றுள்ளது.

எல்பிட்டிய - பத்திராஜா மாவத்தையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 51 வயதுடைய பொதுச் சுகாதார பரிசோதகரே உயிரிழந்துள்ளார்.

குறித்த பொதுச் சுகாதார பரிசோதகரது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற அடையாளம் தெரியாத நபர் ஒருவரால் இந்த துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்ட நபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## தங்கக் கட்டிகளை தேடும் பணி 5ஆவது நாளாக தொடர்கின்றது



**எஸ்.றொசேரியன் லெம்பேட்**

வேதாளை சிங்கி வலை குச்சி மீன்பிடி கிராம கடல் பகுதியில் இலங்கையிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட நிலையில், கடலில் வீசிய கடத்தல் தங்க கட்டிகளைத் திங்கட்கிழமை (26) ஐந்தாவது நாளாகத் தேடி வருகின்றனர்.

தொடர்ந்து மத்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தீவிரமாக தேடி வந்த போதும், தங்கம் கிடைக்காத நிலையில், வட மாநிலத்தில் இருந்து கடலுக்கு அடியில் பொருட்களை தேடும் ஸ்கேனர் கருவி வரவழைக்கப்பட்டு அதன் உதவியுடன் திங்கட்கிழமை (26) ஐந்தாவது நாளாக கூபா வீரர்களை கொண்டு கடலுக்கு அடியில் தங்க கட்டிகளை தேடும் பணி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

## அட்டகாசம் செய்த பொலிஸார் கைது

**நிதர்ஷன் வினோத்**

யாழ்ப்பாணம் பொலிஸாரின் விடுதிக்குள் மதுபோதையில் சென்று அட்டகாசம் செய்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் தங்கியிருக்கும் விடுதிக்குள் மதுபோதையில் நுழைந்து சக பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் முரண்பாட்டில் ஈடுபட்ட இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.




## உலக சாதனை படைத்த முஹமது சம்லான்

**அஹ்சன் அப்தர்**

இரண்டு வயதும் நான்கு மாதங்களுமான சிறுவனொருவன் 35 நாடுகளும் அதனுடைய நாணயங்களையும் 46 வினாடிகளில் கூறி உலக சாதனை படைத்துள்ளார்.

வத்தளை - ஹுனுப்பிட்டியவைச் சேர்ந்த பாத்திமா -இபாஷா முஹம்மத் சபான் தம்பதிகளின் புதல்வரான முகமது சபான் முஹமது சம்லான் என்ற சிறுவனே இவ்வாறு உலக சாதனை படைத்துள்ளார்.



## நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் தீக்கிரை

யாழ்ப்பாணம்- மத்திய பகுதியில் சிறிய ரக வாகனம் ஒன்று திங்கட்கிழமை (26) தீக்கிரையாகியுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு அண்மையில் உள்ள வெற்று காணி ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த வாகனமே இவ்வாறு தீக்கிரையாகியுள்ளது.

யாரேனும் குழுவினரால் தீ வைக்கப்பட்டதா அல்லது தீ விபத்து ஏற்பட்டதா என்பது தொடர்பில் தெரிய வராத நிலையில், சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## இறங்கு துறையை அமைக்குமாறு கோரிக்கை

**எம்.எஸ்.எம். ஹனீபா**

பொத்துவில் பிரதேச மீனவர்களின் இயந்திரப் படகுகளைத் தரித்து நிறுத்திவைப்பதற்கு, இறங்கு துறையை அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, அறுகம்பை மீன்பிடி படகுகள் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் எம்.எல்.தௌபீக் திங்கட்கிழமை (26) தெரிவித்துள்ளார் .

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு இது தொடர்பான மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆழ்கடல் மீனவர்கள் பாதுகாப்பாக தமது இயந்திரப் படகுகளை நிறுத்தி வைப்பதற்கு நிரந்தர இடம் இல்லாததால், மீனவர்கள் நீண்ட காலமாகப் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழ்கடல் மீனவர்களின் மீனவ இயந்திரப்படகுகளை தரித்துப் பாதுகாப்பாக வைத்திருக்க ஒரு நிரந்தர இடம் இல்லாத காரணத்தால் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பாக பொத்துவில் பிரதேச, மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்க வில்லையெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மீனவர் வீட்டுத்திட்டம், மீனவர் வாட்டிகள் மற்றும் ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை ஆகியவற்றையும் அமைத்துத் தருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பொத்துவில் சின்ன உல்லை அறுகம்பை பிரதேச கடற்றொழிலாளர்களின் மீன்பிடி இயந்திர படகுகளை தற்போது நிறுத்தி வைக்கப்படும் இடத்திலிருந்து மாற்றி வேறொரு இடத்தில் நிறுத்தி வைக்குமாறு சுற்றுலாத்துறை சார்ந்தோர்கள் மற்றும் அதிகாரிகள் அழுத்தம் தெரிவித்து வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பல வருடங்களாக இப் பிரதேசத்தில் மீன் பிடி தொழிலில் ஈடுபட்டு வரும் 250 படகுகளும், கடலுக்குள் சென்று மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் 750 மீனவர்களும், இந்த படகுகளின் மூலம் நாளாந்த மீன்பிடி தொழிலையே தமது ஜீவனோபாயமாக கொண்டுள்ள சுமார் 2,500 க்கும் மேற்பட்ட மீனவ தொழில் நடவடிக்கையாளர்கள் மற்றும் 150க்கும் மேற்பட்ட வெளி பிரதேச மற்றும் உள் பிரதேச மீன் வியாபாரிகளும் பாதிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தற்போதைய இடத்திலிருந்து மீன்பிடி படகுகளை அகற்றுவதனால் பொருத்தமான இடத்தில் சகல வசதிகளும் கொண்ட இறங்கு துறையை அமைத்துத் தருமாறு அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





## "காணிப்பத்திரம் வழங்க வேண்டும்"

**வி.ரி.சகாதேவராஜா**

பொத்துவில் மீள்குடியேற்ற கனகர் கிராமத்தில் திங்கட்கிழமை (26) பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த பல வருட காலமாகப் போராட்டத்தில் ஈடுபட்டு அண்மையில் 73 குடும்பங்களுக்குக் காணி பத்திரம் வழங்கப்பட்டது. இப்பத்திரங்கள் ஏனையவர்களுக்கு இன்னும் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. இதனை காரணங்காட்டி அனைவருக்கும் காணி பத்திரம் வழங்கப்படவேண்டும் என கனகர் கிராம மக்கள் பதாதைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது, "பொத்துவில் பிரதேச செயலாளர் இது விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும், எமக்கும் காணி உறுதிப் பத்திரம் வழங்க வேண்டும், காலாகாலமாக இருந்து வந்த எமது பூர்வீக காணிகளை விரைவாகப் பூரணமாக ஒப்படைக்க வேண்டும், 33 வருடங்களாக காடுமண்டி மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்த பொத்துவில் கனகர் கிராம மக்களது காணிகள் பூரணமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்" என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த ஆர்ப்பட்டத்திற்கு பொத்துவில் பிரதேச சபை முன்னாள் உப தவிசாளரும் சமூக செயற்பாட்டாளருமான பெருமாள் பார்த்தீபன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் த.சுபோதரன் உள்ளிட்ட பல பிரமுகர்களும் சமூகமளித்திருந்தனர்.

# எதிர்வரும் மார்ச் மாதம் முதல் விலைகள் குறையுமா?

ஜனவரி மாதம் முதல் பெறுமதி சேர் வரி அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பொருட்களின் விலைகளும் அதிகரித்தன. குறிப்பாக எரிபொருள் விலைகளில் இந்த வரி உள்ளடக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதன் விலைகளும் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் அதிகரித்திருந்தன.

இந்நிலையில் இலங்கை ரூபாயின் மதிப்பு அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் இம்மாதம் சற்று வலுவடைந்து காணப்படும் சூழலில், இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட வேண்டும்.

குறிப்பாக, கடந்த ஆண்டின் பிற்பகுதியில் நாட்டில் போதியளவு மழைவீழ்ச்சி பதிவாகியிருந்தது. இதன் காரணமாக, நீர் மின் உற்பத்தியில் பெரிதும் மேற்கொள்ளப்பட்டதுடன், நிலக்கரி மின் உற்பத்தி வீழ்ச்சி காணப்பட்டது. இதன் பயனை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதாக வாய் வார்த்தைகளில் மாத்திரம் சம்பந்தப்பட்ட அமைச்சர் பேசுவதை அவதானிக்க முடிவதுடன், இதுவரையில் விலை குறைப்பு தொடர்பான உறுதியான தகவல் எதுவும் வெளியாகவில்லை.

இவ்வாறிருக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடமிருந்து அனுமதி கிடைக்க வேண்டும் என அமைச்சுத் தரப்பு தெரிவிப்பதையும், உற்பத்திச் செலவு அதிகமாக இருப்பதாக மின்சார சபை தெரிவிப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

எவ்வாறாயினும், தற்போது நாட்டில் கடும் உஷ்ணமான வானிலை நிலவுவதுடன், எதிர்வரும் சில வாரங்களுக்கு இந்நிலை தொடரும் என எதிர்வு கூரப்பட்டுள்ளது. இந்நிலையில் நீர் மின் உற்பத்தி படிப்படியாகக் குறைந்து, நிலக்கரி போன்ற அதிக செலவுகளுடனான மின் உற்பத்தி முறைகளில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் எதிர்வரும் மாதத்தில் விலைக் குறைப்பு அறிவிக்கப்பட்டாலும், அது எந்தளவு நாட்களுக்கு நடைமுறையில் இருக்கும் என்பது கேள்விக்குறி தான். ஆரம்பத்தில் வருடத்துக்கு இரு தடவைகள் மின்சாரக் கட்டணத்தில் திருத்தம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டு, 2023ஆம் ஆண்டில் நான்கு தடவைகள் கட்டணத் திருத்தம் செய்யப்பட்டது. பின்னர் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை திருத்தம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டு, இறுதியாகக் கடந்த ஆண்டின் செப்டெம்பர் மாதத்தில் விலை அதிகரிக்கப்பட்டது. ஆனாலும், செப்டெம்பர் மாதத்திலிருந்து தொடர்ந்து மூன்று மாதங்களுக்குத் தொடர்ச்சியாக மழை வீழ்ச்சி பதிவாகியிருந்தது. இந்நிலையில், அந்த மழைவீழ்ச்சியின் பயனை மக்களுக்கு இதுவரையில் வழங்காமலும், மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை திருத்தம் எனும் காலக்கெடு கடந்து மேலும் இரண்டு மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும், மக்களுக்கு நிவாரணங்களின்றி, அமைச்சரின் வீர வசனங்கள் மாத்திரமே எஞ்சியுள்ளன. விலைகளை அதிகரிப்பதில் காட்டும் முனைப்பு, அதனைக் குறைப்பதில் காண முடிவதில்லை.

பாடசாலை மாணவர்களுக்கு மின்சாரம் தேவையில்லை, குப்பி லாம்பில் படிக்கலாம், பெருந்தோட்டங்களில் உள்ளவர்கள் 2 மணிக்குப் பின்னர் ஆனந்தமாக இருப்பவர்கள் போன்ற அறிக்கைகளையும் மின்சார சபையின் முக்கிய பொறுப்பிலுள்ளவர்கள் தெரிவிக்கின்றனர். இதிலிருந்து இவர்களின் உண்மையான மனநிலை வெளிப்படுகின்றது.

சரி, தேர்தல் பற்றிய பேச்சுகள் சூடு பிடித்துள்ள நிலையில், வழமை போன்று மக்களைக் கவரும் விலைக் குறைப்புகளில் கவனம் செலுத்துங்கள் மார்ச் மாதம் சலுகைகள் கொண்டு வருமா?


தமிழ் Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

யாவருக்கும் சுயபுத்தி உண்டு. வாழ்கையில் புது, புது அனுபவங்களினூடாக வருகின்ற பகுத்தறிவை, மிகவும் நுட்பமாகப் பொருத்தமான இடங்களில் பிரயோகிப்பதே சுய புத்தியாகும்.

எல்லா விஷயங்களையும் சொல்லிக் கொடுத்தபடி இருக்க முடியாது. பல விடயங்களை நாங்கள் தேட வேண்டியுள்ளது.

மேலும் தனது முழு முயற்சியுடன் நல்ல முடிவை அறிவதே மகிழ்ச்சிகரமானது.

கால மாற்றங்கள் அறிவை, அதன் தேவைகளை எமக்கு உணர்த்தியே தீரும்.

அச்சப்படுவதால் மனிதன் முடிவை எடுக்கத் தயங்குகின்றான். தோல்விகளால் மனிதன் எழுவது எப்படி என உண்மையைத் தனது சுய அனுபவத்தால் அறிந்து கொள்கின்றான்.

உலகில் பல அச்சரியங்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன.

அத்துடன் பேரழிவுகள், யுத்தங்கள், பஞ்சம் என பல இடர்களைச் சந்திக்காமல் இருக்க முடியாது. உலகம் முழுவதிலும் எதுவும் நடக்கலாம். இவற்றைக் கடந்து செல்வதே மனித வாழ்க்கை. சக்தி, துணிவுடன் இயங்குக.

நன்றி: பருத்தியூர் பால. வயிரவநாதன்

இந்திய – மீனவர் பிரச்சினைக்கு

# புறக்கணிப்பு தீர்வைத் தராது

**லக்ஸ்மன்**

எல்லை தாண்டிய மீன்பிடி காரணமாக ஏற்படும் பிரச்சினைகளுக்கும் கச்சத்தீவு புனித அந்தோனியார் திருவிழாவில் இந்திய நாட்டின் பக்தர்கள் கலந்து கொள்ளாமைக்கும் இருக்கின்ற தொடர்பு சற்று வித்தியாசமானதுதான். எப்படியாயினும், இந்திய மத்திய அரசும், தமிழ்நாட்டு அரசும் இந்திய-இலங்கை மீனவர்களுக்கிடையில் இருக்கும் முரண்பாட்டினைத் தீர்த்துவைக்க முயற்சிக்க வேண்டும். அந்த முயற்சி இலங்கை நாட்டின் இறைமை, ஆட்புல ஒருமைப்பாட்டினைப் பாதிக்காத வகையில் அமையவேண்டும்.

1921ஆம் ஆண்டு இந்திய - இலங்கை பிரிட்டிஷினால் செய்துகொள்ளப்பட்ட மீன்பிடி ஒப்பந்தத்தின்படி இந்திய மீனவர்களுக்குப் பாக்கு நீரிணையில் அதிக கடல்பகுதியும், இலங்கை மீனவர்களுக்குக் குறைவான கடல் பகுதியும் பிரிக்கப்பட்டது. அதில் கச்சத்தீவு உள்ளிட்ட 28 கடல் மைல் பகுதிகள் இந்தியாவுக்கும் நெடுந்தீவு உள்ளிட்ட 12 கடல் மைல் கடல் பகுதிகள் இலங்கைக்கும் என பிரிக்கப்பட்டன.

1974இல் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாக கச்சத்தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது. அதனால் இந்திய மீனவர்கள் பயன்படுத்தி வந்த 500 சதுர கி.மீ. கடல் இலங்கை வசமாகியது. இதனால், தமது பாரம்பரிய மீன்பிடி பகுதிகள் பறிபோனதாக இந்திய மீனவர்கள் எண்ணுகிறார்கள். ஆனால், 1974 கச்சத்தீவு ஒப்பந்தத்தின் 6ஆம் சரத்துப்படி இந்த 500 சதுர கி.மீ. பரப்பளவில் இரு நாட்டு மீனவர்களும் மீன்பிடிக்க உரிமையுள்ளது.

இருந்தாலும் பாக்கு நீரிணைப் பகுதியில் இழுவைப் படகுகளைப் பயன்படுத்துவதும் இழுவை வலைகளைப் பயன்படுத்தி இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதனாலேயுமே பிரச்சினைகள் எழுகின்றன. இந்திய- இலங்கை மீனவர்களிடையே இருக்க வேண்டிய ஒற்றுமை சீர்குலைவுக்கும் இதுவே காரணம். பாக்கு நீரிணை கடல்பகுதியில் இந்திய மீனவர்கள் இழுவை வலையைப் பயன்படுத்தக் கூடாது என்பது இலங்கை மீனவர்களின் கோரிக்கை. இந்த நடைமுறையைக் கைக்கொள்ள முடியாமையினால் ஏற்படும் பிரச்சினை பல தசாப்தங்களாகத் தொடர்கின்றன எனலாம்.

இழுவைப்படகுகளின் செயற்பாட்டினால், இலங்கைக் கடற்பரப்பிலுள்ள மீனும் பிற வளங்களும் அழிகின்றன. அதனால் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்படுகிறது. இவ்வாறான சூறையாடலுக்கு இந்திய அரசாங்கத்தின் ஆதரவும் இருக்கிறது என்பதே இலங்கை மீனவர்களது கருத்து. அதற்கு இலங்கைக் கடற்பரப்பில் கைது செய்யப்படும் தமது மீனவர்களது விடுதலை தொடர்பில் கொடுக்கப்படும் அழுத்தம் உதாரணமாகக் காட்டப்படுகிறது.

யுத்த காலங்களிலும் இப்பிரச்சினை இருந்திருந்தாலும், யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் அதிகரித்திருப்பதாகவே உணரப்படுகிறது. இலங்கை அரசாங்கமானது இப்பிரச்சினையைப் பூதாகாரமாக்குவதற்கு இலங்கைத் தமிழர்கள் தமிழக மீனவர்களுடனும், இந்தியாவுடனும் முரண்படும் நிலை அல்லது முறுகல் நிலை ஏற்படுவதற்காக இருக்கலாம் என்ற சந்தேகம் காணப்படுகிறது. அதேநேரத்தில், இந்தியா ஆதிக்க மனோநிலையிலேயே செயற்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது.

> **இந்திய-இலங்கைத் தமிழர்களின் நீண்டகால இனப்பிரச்சினைக்குத் தீர்வைப்பெற்றுத் தரும் என்றே இப்போதும் பெரும்பாலான தமிழ்த் தேசியக் கட்டுக்குள் இருக்கும் அரசியல்வாதிகள் நம்புகின்றனர். ஆனால், வருடத்திற்கு ஒரு தடவை நடைபெறும் கச்சத்தீவு புனித அந்தோனியார் திருவிழாவுக்கு இந்தியப் பக்தர்கள் வருகை தரா, இந்தியப் பக்தர்களில்லாத திருவிழா நடைபெறும் நிலை ஏற்பட்டிருக்கிறது**

இலங்கையர்கள் மாத்திரமன்றி, இந்தியப் பக்தர்களும் இணைந்து வருடம்தோறும் வெகு விமர்சையாக கொண்டாடும் கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா இவ்வருடம் இந்தியர்களில்லாது நடைபெற்று முடிந்திருக்கிறது. திருவிழாவிற்கு இலங்கையில் இருந்து 4,454 பக்தர்கள் கலந்துகொண்டனர். இந்தியப் பக்தர்கள் மீனவர்களின் விடுதலையை வலியுறுத்தி எவரும் வருகை தரவில்லை. பக்தர்களின் நலன் கருதி சுகாதார வசதிகள் போக்குவரத்து ஒழுங்குகள், உணவு வசதிகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

வரலாற்றுத் தவல்களின்படி 111 திருவிழாவாக இது அமைந்திருந்தது. இத்திருவிழாவுக்கு அரசியல் சாயம் பூசப்பட்டு அநாகரிகப்படுத்தப்படாது, ஆன்மீக நலன்களை மேவும் புனிதமான திருவிழாவாக நடைபெறவேண்டுமென்பதே கத்தோலிக்க மக்களின் வேண்டுகோளாகும் என்று திருவிழாவை இந்தியர்கள் பகிஷ்கரிக்கக்கூடாது எனவும் கருத்துக்கள், வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டன.

குறிப்பாக, தீர்க்கப்படாமல் இழுபட்டுச் செல்லும் இரு நாட்டு மீனவர் பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு ஏற்படவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. இழுவை மடிகளைக் கொண்ட ரோலர் படகுகள் கடல் வளத்தை நாசப்படுத்திக் கொண்டிருப்பதனை எந்த விதத்திலும் அனுமதிக்க முடியாது. சாதாரண நாட்கூலிகளான மீனவர்கள் ரோலர் படகுகளின் சொந்தக்கார முதலாளிகளின் பிடிகளுக்குள் அகப்பட்டுச் செய்வதறியாது, கட்டளைகளுக்குப் பணிந்து தொழில் செய்யும் சூட்சுமம் உயர்மட்ட அளவில் நிறுத்தப்பட வேண்டும். இதை விடுத்து, ஆன்மீகத்திற்கும் வியாபாரத்திற்கும் முடிச்சுப் போடுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என மட்டக்களப்பு ஆயர் இல்ல அருட்தந்தை ஜே.ஐ.சந்திரா இது தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதற்கிடையில், இந்திய இழுவை படகுகளுக்கு எதிரான கறுப்புக் கொடி போராட்டம் ஒன்றினை இந்திய- இலங்கை கடல் எல்லையில் நடத்துவதற்கு யாழ்ப்பாண மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புகளின் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது. இப் போராட்டம் இந்தவாரத்தில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய இழுவை படகுகள் எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து தொழில் முதல்களை அழித்து வந்தவேளை, எமது கடற்படையினரால் அந்த இந்திய இழுவைப்படகுகள் கைப்பற்றப்பட்டு அதில் பயணித்த கடற்றொழிலாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். இப்போது இந்திய அரசாங்கம், அந்த கடற்றொழிலாளர்களை விடுதலை செய்யுமாறு எமது அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

எங்களுடைய வளங்களை அழித்தவர்களை எப்படி விடுதலை செய்ய முடியும்? அவர்களுக்குரிய தக்க தண்டனை கொடுத்த பின்னரே அவர்களை விடுதலை செய்யலாம். ஏனென்றால் எங்களது வளங்கள் எத்தனையோ காலமாக அழிக்கப்பட்டுள்ளன. எங்களுடைய வளங்களைச் சூறையாடி தங்களது பிழைப்புகளை நடத்தியவர்கள், தங்களது மீனவர்களை எமது அரசாங்கம் பிடித்து வைத்துள்ளபோது அவர்களை விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றார்கள் என்பது அவர்களது குற்றச்சாட்டு.

எங்களது அரசாங்கம் இந்திய அரசாங்கத்தின் அழுத்தங்களுக்கு அடிபணியக் கூடாது. கைது செய்த மீனவர்களுக்குத் தக்க தண்டனையைக் கொடுக்க வேண்டும் எக்காரணம் கொண்டும் அவர்களிடம் மண்டியிடக் கூடாது என்ற பிடிவாதத்துடன் இருக்கின்ற இலங்கை மீனவர்களுக்கு அரசாங்கங்கள் எவ்வாறான முடிவைக் கொடுக்கப் போகின்றன என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

இந்திய இழுவைப் படகுகள் பல சூழலியல் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன. மீன்களின் பெருக்கமும் வளர்ச்சியும் இப் படகுகளின் செயலால் ஏற்படுகின்றன. இழுவைப் படகு மீன்பிடி என்பது, கடலின் அடிவரை உள்ள அனைத்தையும் வாரி அள்ளி எடுப்பதாகும். இந்த மீன்பிடி முறையில், வலையை வீசி, கடலின் அடி வரையுள்ள அனைத்தையும் அள்ளுவதால், மீன்களின் வகை, வளர்ச்சி கருத்தில் கொள்ளப்படுவதில்லை. கடலடித் தாவரங்கள் அழிகின்றன. இதனால், கடலடி உயிரியல் சமநிலையைப் பாதிக்கப்படுகிறது. கடல் வாழ் உயிரினங்கள், கடலடித்தள உயிரியல் நிலைப்புக்கு வேண்டிய நுண்ணுயிரிகளும் உயிரினங்கள், கடலடி பவளப்பாறைகளும் முருகைக் கற்களும் அழிகின்றன. மீன்களின் முட்டைகளும் குஞ்சுகளும் அழிவதனால், மீன்களின் இனப்பெருக்கம் தடுக்கப்படுவதுடன், நீண்டகாலத்தில் மீனிருப்புக்குப் பாதிப்பு என பல சூழலியல் பிரச்சினைகளுக்குக் காரணமாக இருக்கின்றது.

இந்திய-இலங்கைத் தமிழர்களின் நீண்டகால இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தரும் என்றே இப்போதும் பெரும்பாலான தமிழ்த் தேசியக் கட்டுக்குள் இருக்கும் அரசியல்வாதிகள் நம்புகின்றனர். ஆனால், வருடத்திற்கு ஒரு தடவை நடைபெறும் கச்சத்தீவு புனித அந்தோனியார் திருவிழாவுக்கு இந்தியப் பக்தர்கள் வருகை தரா, இந்தியப் பக்தர்களில்லாத திருவிழா நடைபெறும் நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழக அரசும் பல வழிகளிலும் இந்திய மீனவர்களது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மத்திய அரசைக் கோரிவிட்டது ஏன் அப்பிரச்சினை தீர்க்கப்படாமலேயே தொடர்கிறது என்பது புரியாத புதிரே.

இந்திய மத்திய அரசாங்கமானது வருடத்தில் குறிப்பிட்டளவான நாட்கள் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்குமாறு கோருகிறதே தவிர, இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளையோ, இழுவைப் படகுகளால் ஏற்படும் சூழலியல் நீண்ட காலப் பிரச்சினையையோ கவனத்தில் எடுப்பதாக இல்லை. இவ்வாறான நிலையில் எல்லை தாண்டும் இந்திய மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கப் போவதில்லை என்பதே வெளிப்படை.

## கடிதங்கள்

### தெரு விளக்கு பராமரிப்பில் அலட்சியம்

திருகோணமலை - தம்பலகாமம் பிரதேச சபைக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை பிரதான வீதி உள் வீதிகளில் தெரு விளக்குகள் எரியாததால், பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முள்ளிப்பொத்தானை நகரின் பல பகுதிகளில், தெரு விளக்கு எரியாததால், இரவு நேரத்தில் திருட்டு மற்றும் போதைப்பொருள் பாவனைகள் போன்ற சம்பவங்கள் இந்தப் பிரதேசங்கள் அடிக்கடி நிகழ்வதாகவும், நாளாந்த கருமங்களுக்குச் சென்று, வீடு திரும்புவோர் அச்சத்துடன் நடந்து கொள்ள வேண்டியுள்ளதாகவும் பாதசாரிகளும் பிரதேசவாசிகளும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், உயர்தர மற்றும் சாதாரண தர மாணவர்களுக்காக பாடசாலைகளில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற இரவு நேர கற்றல் நடவடிக்கைகளுக்கு இருள் சூழ்ந்த வீதிகளின் ஊடாக பிள்ளைகளை அனுப்புவதற்கு பெற்றோர்கள் அச்சப்படுவதாக கூறியுள்ளனர்.

இந்த நிலையில், இந்தப் பிரதேசங்களில் இரவு வேளைகளில் பொதுமக்கள் நாளாந்த கருமங்களை திருப்தியாக மேற்கொள்வதற்கு ஒரு பாதுகாப்பற்ற நிலை தொடர்ச்சியாக இருந்து வருவதால், அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமை ஆகும்.

– எப்.முபாரக்

# விடியலை நோக்கிய நடை





றிஸ்னா அசாருதீன்.
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.
மூன்றாம் வருடம்.
ஊடகக் கற்கைகள் துறை

மனித வாழ்வைப் பொறுத்த வரையில் அது இலக்குகள், ஆசைகள், மற்றும் எதிர்பார்ப்புகள் போன்றவற்றால் சூழப்பட்டதொரு பெரிய பரப்பாகக் காணப்படுகிறது.

தன்னுடைய இலக்கினை அடைய வேண்டும் என்ற அவாவுடன் ஒவ்வொருவரும், ஒவ்வொரு நாளும் பயணித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

பெரும்பாலும் அப்பயணமானது மனித வாழ்வின் அத்தியாவசிய தேவைகளான உணவு, உடை, உறையுள் போன்றவற்றை முதன்மைப்படுத்தியதாகவும் இருந்து வருகின்றது. இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான அத்தியாவசிய தேவைகளைப் போலவே மனித வாழ்வில் பயணங்களும் இன்றியமையாத ஓர் அம்சமாக மாறி விட்டது.

இதனால் தான் மனித வாழ்வில் பயணங்கள் என்றும் ஓய்வது இல்லை என்று சொல்வார்கள். நாம் அன்றாடம் எத்தனையோ பயணங்களை மேற்கொள்கிறோம். எவ்வளவோ இடங்களுக்குச் செல்கிறோம். எத்தனையோ மனிதர்களைச் சந்திக்கின்றோம். அவர்களுள் சிலர் வாழ்வையே பயணமாகக்கொண்டு சுடும் வெயிலிலும், வீதி ஓரங்களிலும் துவண்டு கிடக்கும் பாதையோர யாசகர்களைப் பற்றிச் சிந்தித்தது உண்டா?

அவர்களின் ஒவ்வொரு நடையும் ஏதோ ஒன்றுக்காகத் தினமும் ஓயாது சென்று கொண்டு தான் இருக்கின்றன. அப் பயணத்தில் அவர்கள் சலிப்புற்றாலோ, துவண்டு கிடந்தாலோ அன்று அவர்கள் பட்டினி கிடக்க வேண்டிய நிலை தான் ஏற்படும். அவர்களைப் பற்றியும் நாம் ஆழமாகச் சிந்திக்கவும் செயலாற்றவும் கடமைப்பட்டுள்ளோம். அவ்வாறான நிலைமையில் எம்மிடம் வரக்கூடிய சிலருடன் நாம் கோபத்துடன் கதைக்கின்றோம். எமக்கு ஏதேனும் சங்கடமான நிலைமைகளின் போது அவர்களைப் புறக்கணித்து தீய வார்த்தைப் பிரயோகங்களால் அவர்களது மனதைப் புண்படுத்தி விடுகின்றோம். இன்னும் சிலர் எம்மிடையே வந்து ஏதேனும் தமக்குக் கொடுக்கும் படி கேட்டால் நாம் அவற்றைக் கவனத்தில் எடுக்காது மிகச் சுலபமாகக் கடந்து செல்கிறோம்.

அவர்களும் எம்மை போன்ற மனிதர்களே தவிர வேறு அல்லர் என்பதும், எமக்கு இருக்கக்கூடிய அதே உணர்வுகளோடு தான் அவர்களும் இறைவனால் படைக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் எம்மில் சிலரது அறிவிற்கு எட்டாத ஒரு விடயமாக இருந்து வருகிறது.

கிடைக்கக்கூடிய இடங்களைத் தாராளமாய் ஏற்றுக்கொண்டு தலை வைத்து உறங்கும் பக்குவமும், எது நேர்ந்தாலும் பரவா இல்லை என்று நினைத்தபடி நிம்மதி இன்றி உயிரைக் கைகளில் பிடித்துக்கொண்டு கழியும் இராப் பொழுதுகளும் விடியலின் வருகைக்காய் ஏங்கிக்கொண்டு தான் இருக்கின்றன. கிடைக்கும் கொஞ்ச உணவில் தன் வயிற்றுப் பசியை போக்குவதா? 'அம்மா! பசிக்கிறது' என்று அழுதுகொண்டிருக்கும் தன் குழந்தையின் கண்ணீர் துடைப்பதா? என்று தவித்தபடி முழுவதுமாய் குழந்தையின் கண்ணீரை மட்டும் துடைத்துக்கொண்டு தன் வயிற்றை வெறுமையாய் வைக்கும் உள்ளங்களும் அவர்களுக்குள் இருக்கத்தான் செய்கின்றன. இவர்கள் பற்றி அக்கறை கொள்ளும் உள்ளங்கள் எம்மில் எத்தனை பேர் இருக்கிறார்கள்?? சூழ்நிலைகளைச் சகித்துக்கொண்டு சுக, துக்கங்களை ஏற்றுக்கொண்டு மனம் நிறையாவிடினும், வயிற்றுப் பசி தீர வேண்டும்

**சுருங்கிய முகமும், நடுநடுங்கிக் கொண்டிருக்கும் கைகளும், கலங்கிய கண்களுமே அவர்கள் யார் என்பதனை எமக்கு அடையாளப்படுத்தி விடுகின்றன. அவர்கள் தம் வாழ்வில் சந்திக்கும் ஒவ்வொருவரும், ஏதும் கடுமையாகச் சொல்லி விடுவார்களோ? என்ற ஏக்கத்துடனேயே ஒவ்வொரு நாளையும் கடந்து செல்கிறார்கள்**

**'அம்மா' என்ற அவர்களின் வார்த்தைக்குப் பின்னால் ஆயிரம் அர்த்தங்கள் மறைந்து இருக்கின்றன. வயிற்றிலும், கைகளிலும் குழந்தைகளைச் சுமந்துகொண்டு வெயில், மழை பாராது, வீதி ஓரங்களிலும், பொது இடங்களிலும் ஒரு கைப்பிடி சோற்றுக்காய் பெண்கள் தள்ளாடித் திரிவதனையும் பார்க்க உள்ளத்தில் ஏதோ ஒரு பிணி ஆட்கொண்டது போலத் தோன்றுகிறது**

என்ற மன ஆதங்கத்துடன் அவர்களது இருள் சூழ்ந்த வாழ்வு சுழன்றுகொண்டுதான் இருக்கிறது.

தட்டில் பத்து ரூபாயேனும் போடக்கூடிய தனவந்தர்களின் பிறந்தநாள் எப்போது வரும் என்று பார்த்துக்கொண்டிருக்கும் அளவிற்கு அவர்களின் ஆசைகளும் ஏக்கங்களும் விடியலை நோக்கி இன்றும் நடைபோட்டுக் கொண்டு தான் இருக்கின்றன.

சுருங்கிய முகமும், நடுநடுங்கிக் கொண்டிருக்கும் கைகளும், கலங்கிய கண்களுமே அவர்கள் யார் என்பதனை எமக்கு அடையாளப்படுத்தி விடுகின்றன. அவர்கள் தம் வாழ்வில் சந்திக்கும் ஒவ்வொருவரும், ஏதும் கடுமையாகச் சொல்லிவிடுவார்களோ? என்ற ஏக்கத்துடனேயே ஒவ்வொரு நாளையும் கடந்து செல்கிறார்கள். உண்மையில் அவர்களை எமது சமூகம் ஏதோ ஒரு வகையில் புறந்தள்ளிக்கொண்டு தான் இருக்கிறது. ஏதோ ஒரு வகையில் நாம் அவர்கள் மத்தியில் எதிரிகளாகத் தான் நடந்துகொள்கிறோம். அவர்களும் எம் போன்ற மனிதர்களே தவிர வேறு யாரும் இல்லை. அவர்கள் மத்தியில் பல்வேறு திறமைகளையும் முடக்கிக்கொண்டு சாதிக்கத் துடிப்பவர்களும் அவர்கள் மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆசைகளும், ஏக்கங்களும் நிறைந்த அவர்களது இருள் சூழ்ந்த வாழ்வு, எப்போது தான் விடியும்? என்பது கேள்விக்குறியே!

பணம் பணம் என்று நேரம் காலம் பாராது ஓடிக்கொண்டிருக்கும் இந்த இயந்திரமயமான உலகில், வயிறு நிறைய ஒரு பிடி சோறு கிடைத்தால் போதும் என்று எண்ணக்கூடிய அவர்கள் மத்தியில் எமது சமூகம் எங்கேயுள்ளது. நிரந்தரமே இல்லாத இந்த உலக வாழ்வில் நாம் மரணித்த பிறகு எதனையுமே எடுத்துச் செல்லப் போவது இல்லை. மாறாக ஒரு மனிதனுக்குக் கொடுக்கும் கொடையும், நல்ல காரியங்களுமே இறுதியாக எமக்கு கை கொடுக்கும்.

'அம்மா' என்ற அவர்களின் வார்த்தைக்குப் பின்னால் ஆயிரம் அர்த்தங்கள் மறைந்து இருக்கின்றன. வயிற்றிலும், கைகளிலும் குழந்தைகளைச் சுமந்துகொண்டு வெயில், மழை பாராது, வீதி ஓரங்களிலும், பொது இடங்களிலும் ஒரு கைப்பிடி சோற்றுக்காய் பெண்கள் தள்ளாடித் திரிவதனையும் பார்க்க உள்ளத்தில் ஏதோ ஒரு பிணி ஆட்கொண்டது போலத் தோன்றுகிறது. உச்சி வெயில் நேரங்களில் காலில் பாதணிகள் கூட அணியாத வண்ணம் சுடு மணலிலும், வீதிகளிலும் அவர்களின் கால் தடம் பதியாத இடம் எங்கு தான் உள்ளது? அடுத்த நபர்களைத் தன்னோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது அவர்களுக்கு எழக்கூடிய மன வலியை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. பத்து மாதங்கள் சுமந்து தாம் பெற்று வளர்த்த பிள்ளைகளால் கைவிடப்பட்டவர்களாகவும், குடும்பப் பின்னணியால் புறந்தள்ளி ஒதுக்கப்பட்டவர்களாகவும், போரில் பாதிக்கப்பட்ட வர்களாகவும், அகதிகளாக இடம்பெயர்ந்து வந்தவர்களாகவும் தமது வாழ்நாளை நிம்மதி இன்றிக் கழிக்கும் இவர்கள் கடவுளிடம் கேட்டுப் பெற்ற வரமா இது?


ஆசைகளைத் தம்முள் அடக்கிக்கொண்டு கொடுப்பதைக் கைகள் ஏந்தி வாங்கிக்கொண்டு நடை போட ஆரம்பிக்கிறது அவர்களது வாழ்வு. தமது ஆசைகள், கனவுகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற வார்த்தைக்கு அவர்கள் வாழ்வில் ஒரு துளியேனும் இடமே இல்லாமல் போய் விடுகிறது. கை நிறையச் சம்பாதிக்கக் கூடிய மனிதர்கள் கூட இன்றைய எமது நாட்டினுடைய பொருளாதார நிலைமை தம்முடைய வாழ்வில் பாரிய தாக்கத்தினை செலுத்தி உள்ளது என்று கூறும் அளவிற்கு இருக்குமேயானால், கொடுப்பதை எடுத்துக்கொண்டு குருவி சேர்ப்பது போல நாணயக் குற்றிகளைச் சாரி மடிப்பில் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்க்கும் இவர்கள் மத்தியில் பெரும் பெரும் உழைப்பாளிகள் எங்கே இருக்கிறார்கள்.

தீர்வற்ற தீராத் திகிலால் திண்டாடிக்கொண்டு இருக்கும் அவர்களது வாழ்வில் வயிறார உணவு உண்டு பல நாளாயிற்று என்ற குரல்களும் இன்றுவரை ஒலித்துக்கொண்டு தான் இருக்கின்றன.

இவ்வாறு பல கனவுகள், ஆசைகள் சுமந்து வாழும் அவர்களது வாழ்வில் இருள் நீங்கி, விடியல் பிறக்க நாம் அவர்களுக்கு எம்மால் இயன்றளவு கொடுத்து உதவுவது என்பது எம்மை சகல தீய சக்திகளிலிருந்தும் பாதுகாத்துக்கொள்ளப் பக்க பலமாய் இருக்கும். மாறாக அவர்களது உணர்வுகளையும், ஆசைகளையும், ஏக்கங்களையும் வெறுமனே பார்த்துவிட்டுக் கடந்து செல்லாமல் அவற்றுக்கு மதிப்பளித்து அவர்களை நம்மில் ஒருவராக மதித்துச் செல்லப் பழகுவது எமது தலையாய கடமையாக இருந்து வருகிறது.

## வைத்தியசாலைகளில் நிலையான மின் விநியோகத்துக்கான திட்டத்துக்கு

# ஜப்பான் உதவி



வைத்தியசாலைகளில் நிலவும் மின் விநியோக நெருக்கடி நிலையை மேம்படுத்துவதற்காக 1.23 பில்லியன் ஜப்பானிய யென்களை வழங்குவதற்கான உடன்படிக்கையில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் கே.எம்.எம். சிறிவர்தன ஆகியோர் கைச்சாத்திட்டிருந்தனர். இந்நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த உதவியினூடாக, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, இரத்தினபுரி போதனா வைத்தியசாலை மற்றும் குருநாகல் போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் காபன் வெளிப்பாட்டை குறைப்பதற்கும், மின்சார செலவுகளால் ஏற்படும் நெருக்கடியை தணிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த உதவியுடன், குறித்த வைத்தியசாலைகளில் சூரிய மின் வலுக் கட்டமைப்புகள் நிறுவப்பட்டு, தொடர்ச்சியான மின்விநியோகம் உறுதி செய்யப்படும் என்பதுடன், 2030ஆம் ஆண்டளவில் மின்சாரத் தேவையின் 70%க்கும் அதிகமான பகுதியை புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளும் இலக்குக்கு பங்களிப்பு வழங்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் சுகாதாரப் பராமரிப்பு உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக வழங்கப்பட்ட எரிபொருள் உதவியைப் போன்றதாக இந்தத் திட்டமும் அமைந்திருக்கும். இந்த சுகாதார பராமரிப்பு நிலையங்களின் மீண்டெழுந்திறனை மேம்படுத்தும் வகையில் இந்த சூரிய மின் பிறப்பாக்கல் வசதிகள் அமைந்திருக்கும் என்பதுடன், இலங்கை மக்களின் நலனை மேம்படுத்துவதிலும் பங்களிப்பு செலுத்தும். சுகாதார பராமரிப்பு சேவைகளை மேம்படுத்துவதிலும், நிலைபேறான வலுத் தீர்வுகளை ஊக்குவிப்பதிலும் காண்பிக்கும் உறுதியான அர்ப்பணிப்பை இந்த கைகோர்ப்பு உறுதி செய்வதுடன், ஜப்பான் மற்றும் இலங்கை இடையே காணப்படும் பரஸ்பர உறவுகளையும் வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

சூரிய மின் பிறப்பாக்கல் வசதியை வெற்றிகரமாக நிறுவுவதற்கு ஜப்பானிய அரசாங்கம் எதிர்பார்ப்பதுடன், புதுப்பிக்கத்தக்க வலு இலக்குகளை எய்துவதற்கும், பசுமையான எதிர்காலத்தை கொண்டிருப்பதற்கும் ஆதரவளிப்பதாகவும் அமைந்துள்ளது.

## கொமர்ஷல் வங்கியின்

# பண்டிகைக்கால ஊக்குவிப்பு திட்டம்

இலங்கை கொமர்ஷல் வங்கி, தனது டெபிட் அட்டைகளுக்கு இந்த பண்டிகைக் காலத்தில் அதிக செலவு செய்பவர்களுக்கு ரூ.6 மில்லியன் பெறுமதியான பரிசில்களை வழங்க முன்வந்துள்ளதாக அறிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கியின் இந்த ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் இருவருக்கு சிங்கப்பூரில் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய விடுமுறை, உயர்தர மடிக்கணினிகள், இரட்டை பகிர்வுடன் கூடிய சொகுசு ஹோட்டலில் தங்கக்கூடிய வசதி, மற்றும் ஒவ்வொன்றும் ரூ.50,000 பெறுமதியான 20 சுப்பர் மார்க்கெட் வவுச்சர்கள், என்பன டெபிட் அட்டை பயனர்களுக்கு வழங்கப்படவுள்ளது. இந்த அதிர்ஷ்ட வாய்ப்புகளை பெறுவதற்கு டெபிட் அட்டைதாரர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.25,000 அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியில் கொள்வனவுகளை செய்திருக்க வேண்டும் என வங்கி தெரிவித்துள்ளது.



ஈஸ்டர் ரமழான், சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு பெப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடைபெறவுள்ள மாதாந்த சீட்டிழுப்புகளில்; மேற்படி பரிசில்களுக்குரிய அதிர்ஷ்டசாலிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

கொமர்ஷல் வங்கியின் அட்டை நிலையத்தின் தலைவர் நிஷாந்த டி சில்வா இது தொடர்பாக தெரிவிக்கையில், 'இந்த கொமர்ஷல் வங்கி டெபிட் அட்டை பரிசில் பண்டிகைக்கால பிரசாரத்தின் நோக்கமானது எமது விசுவாசமிக்க டெபிட் அட்டை பயனர்களுக்கு வெகுமதி அளிப்பதுடன் நாளாந்த பரிவர்த்தனை நடவடிக்கைகளுக்கு பணத்துக்கு பதிலாக டெபிட் அட்டைகளை பயன்படுத்தும் பழக்கத்தை ஊக்குவிப்பதுமாகும்' என்றார்.

# இலங்கை Anesthesiologists கல்லூரியின் கூட்டத்துக்கு Sunshine Medical Devices

*Sunshine Medical Device*, இலங்கையின் *Anesthesiologists* நிபுணர்கள் மற்றும் தீவிர சிகிச்சை நிபுணர்கள் கல்லூரியால் ஏற்பாடு செய்யப்பட்டு, சமீபத்தில் முடிவடைந்த 40ஆவது வருடாந்த கல்விக் காங்கிரஸின் *Diamond* அனுசரணையாளராக கூட்டு சேர்ந்தது.

கொழும்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக *RCOA (UK)*இன் துணைத் தலைவர் டொக்டர் ஹெல்ஜி ஜோஹன்னசன் மற்றும் கௌரவ விருந்தினராக ஐக்கிய இராச்சிய தேசிய சுகாதார சேவையின் *(NHS)* விமர்சன மற்றும் அறுவை சிகிச்சை பராமரிப்புக்கான தேசிய மருத்துவ பணிப்பாளர் பேராசிரியர் ரமணி முனசிங்க உள்ளிட்ட புகழ்பெற்ற மருத்துவ நிபுணர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின்போது, ஆலோசகர்கள், பதிவாளர்கள், மருத்துவ அதிகாரிகள் மற்றும் கிராமப்புற மருத்துவமனை ஆலோசகர்களிடையே உரையாடல் மற்றும் ஒத்துழைப்பை வளர்ப்பதில் *Sunshine Medical Devices* முக்கிய பங்கு வகித்தன. நிறுவனச் சாவடி ஒத்துழைப்புக்கான மையப் புள்ளியாகச் செயல்பட்டது மற்றும் சன்ஷைனின் பல்வேறு வகையான தயாரிப்புகளை ஆராய்ந்து



புரிந்துகொள்வதற்கான வாய்ப்பை மருத்துவ நிபுணர்களுக்கு வழங்கப்பட்டது. ஆலோசகர்கள் சன்ஷைனின் தயாரிப்பு போர்ட்ஃபோலியோவில் ஆர்வத்தை வெளிப்படுத்தினர், இதில் *Airway Management* தயாரிப்புகள், *Pain Management* தயாரிப்புகள், *Hyperthermia Management* தயாரிப்புகள், *Secretion Management* தயாரிப்புகள், மருந்து மற்றும் *Infusion* விநியோக அமைப்புகள் மற்றும் *Blood Gas Analyzers* ஆகியவை அடங்கும்.

மதிப்புமிக்க விவாதங்கள் மற்றும் தொழில்முறை ஒத்துழைப்புகளை எளிதாக்குவதன் மூலம், சன்ஷைன் அவர்களின் புத்தாக்கமான தீர்வுகளை காட்சிப்படுத்தியது மட்டுமல்லாமல் மருத்துவ சமூகத்தின் குறிப்பிட்ட தேவைகள் பற்றிய நுண்ணறிவுகளையும் பெற்றது. இலங்கையில் சுகாதாரப் பாதுகாப்புத் துறையை உயர்த்துவதற்கான அவர்களின் அர்ப்பணிப்புக்கு சான்றாக, *Sunshine Medical Devices*, தொழில்துறை அறிவைப் பகிர்ந்துகொள்வதன் மூலமும், மருத்துவ நிபுணர்களுடன் சாத்தியமான ஒத்துழைப்பை ஆராய்வதற்காக நிபுணர்களிடையே பிரத்தியேகமான தொடர்புகளைத் ஏற்படுத்துவதன் மூலமும் நம்பிக்கைக்குரிய வழிகளைத் தொடர உள்ளது.

40ஆவது ஆண்டு கல்வி மாநாடு பல தொழில் கூட்டாளிகளின் தாராளமான பங்களிப்புகளால் சாத்தியமானது, இது இன்றுவரை மிக முக்கியமான அமர்வுகளில் ஒன்றாகும். *Sunshine Medical Devices* ஒரு முதன்மை அனுசரணை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறது, இலங்கையில் மருத்துவ நிபுணர்களின் இந்த தலைசிறந்த கூட்டத்தின் ஒட்டுமொத்த வெற்றிக்கு பங்களிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# நவம் மகா பெரஹரா




கொழும்பு– ஹுனுப்பிட்டிய, கங்காராம விகாரையின் வருடாந்த நவம் பெரஹெராவின் இரவு வீதி உலாவை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மங்கள ஹஸ்திராஜயா யானை மீது கரடுவ வைத்து பெரஹெராவை வெள்ளிக்கிழமை (23) ஆரம்பித்து வைத்தார்.

கங்காராம விகாரையின் டிஜிட்டல் இணையத்தளமும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது.


இந்நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன ஜனாதிபதி தொழிற்சங்க அலுவல்கள் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.




















வரலாற்று சிறப்பு மிக்க மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பஞ்சரத பவனி சனிக்கிழமை (24) சிறப்பாக நடைபெற்றது.

# பஞ்சரத பவனி




# வருடாந்த திருவிழா




கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா வெள்ளிக்கிழமை (23) மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இதனைத்தொடர்ந்து, சிலுவைப் பாதை, நற்கருணை ஆராதனை மற்றும் திருச்சொரூப பவனி ஆகியன இடம்பெற்று சனிக்கிழமை (24) காலை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.








புது டெல்லி

# 'மன் கி பாத்' நிகழ்ச்சி மூன்று மாதங்களுக்கு கிடையாது



"மனதின் குரல்" என்ற தலைப்பில் மாதம்தோறும் வானொலியில் பிரதமர் மோடி பேசும் "மன் கி பாத்" நிகழ்ச்சி தேர்தல் காலத்தை முன்னிட்டு மூன்று மாதங்களுக்கு கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாதந்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் மனதின் குரல் (மன் கி பாத்) எனும் வானொலி நிகழ்ச்சி மூலம் பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்காக உரையாற்றி வருகிறார்.

அதன்படி, இந்த பெப்ரவரி மாதத்தில் கடைசி ஞாயிற்றுக்கிழமையான 25ஆம் திகதி தனது 110ஆவது மனதில் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி உரையாற்றினார்.

அப்போது அவர், "தேர்தலை முன்னிட்டு அடுத்த மூன்று மாதங்களுக்கு மனதில் குரல் நிகழ்ச்சி நடைபெறாது. மீண்டும் பா.ஜ.க. ஆட்சி வந்த உடன் 111ஆவது நிகழ்ச்சியாக மனதின் குரல் மீண்டும் தொடங்கும்" என தெரிவித்துள்ளார்.







குஜராத்

# மோடி – 'ஸ்கூபா டைவிங்'

'எனது பல வருட ஆசை நிறைவேறியது" என்று கடலுக்குள் மூழ்கியதாகக் கூறப்படும் துவாரகாவில் வழிபட்டமை குறித்து பிரதமர் மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

குஜராத்தின் துவாரகாவில் 4,150 கோடி ரூபாய் மதிப்பிலான பல வளர்ச்சித் திட்டங்களுக்குப் பிரதமர் நரேந்திர மோடி ஞாயிற்றுக்கிழமை (25) அடிக்கல் நாட்டிவைத்துள்ளார்.

முன்னதாக, கடலுக்குள் மூழ்கியதாகக் கூறப்படும் துவாரகா நகருக்குச் சென்று பூஜை செய்ய விரும்பிய பிரதமர் மோடி, ஞாயிற்றுக்கிழமை (25) ஸ்கூபா டைவிங் வீரர்கள் உதவியுடன் படகில் அரபிக்கடலுக்குள் பயணித்துள்ளார்.

துவாரகா நகரை உருவாக்கியவராக நம்பப்படும் கடவுள் கிருஷ்ணருக்கு மயிலிறகு விருப்பமான ஒன்று.

காவி உடை அணிந்து தனது கையில் மயிலிறகுடன் 'ஸ்கூபா டைவிங்' கருவிகளை உடலில் பொருத்திக்கொண்டு பிரதமர் மோடி கடலுக்கடியில் சென்று தரிசனம் செய்துள்ளார். அவருக்குப் பாதுகாப்பாக ஏனைய ஸ்கூபா டைவிங் வீரர்கள் உடன் சென்றுள்ளனர்.

ஆழ்கடலின் தரைப்பகுதிக்குள் சென்ற பிரதமர் மோடி, அங்கு தான் கொண்டு சென்ற மயிலிறகைத் தரையில் வைத்துச் சிறப்புப் பூஜை நடத்தியுள்ளார். அதன்பின்னர் தரைப்பகுதியைத் தொட்டு வணங்கிய அவர், கடலிலிருந்து வெளியே வந்துள்ளார். இதுதொடர்பான புகைப்படங்கள், வீடியோக்கள் தற்போது இணையதளங்களில் வெளியாகி வேகமாகப் பரவி வருகின்றன.

அமெரிக்கா

# "அமைதிக்கான சரியான தருணம் இதுதான்"



இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மீண்டும் உலக நாடுகளுக்கிடையே போர்கள் தோன்றாமல் இருக்க அமெரிக்காவின் தலைமையில் பல உலக நாடுகளை உள்ளடக்கி உருவான சர்வதேச அமைப்பு, ஐக்கிய நாடுகள் அமைப்பு.

ஐ.நா. சபையின் முக்கிய அங்கம் ஐ.நா. பாதுகாப்புச் சபை. இதில் 15 உறுப்பினர் நாடுகள் உள்ளன. இவற்றில் நிரந்தர உறுப்பினர் நாடுகள் 5.

2022 பெப்ரவரி 24ம் திகதி தொடங்கிய ரஷ்ய - உக்ரைன் போர் ஞாயிற்றுக்கிழமை (25) 2 வருடக் காலகட்டத்தை நிறைவு செய்துள்ளது.

உலக நாடுகள் மற்றும் ஐ.நா. சபை ஆகியவற்றின் போர் நிறுத்த கோரிக்கையை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் புறக்கணித்து விட்டார்.

இப்பின்னணியில், ஐ.நா. சபையின் பாதுகாப்பு கவுன்சில், ஞாயிற்றுக்கிழமை (25) ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் உரையாற்றினார். அப்போது அவர், "2 வருடங்களாக நடக்கும் இப்போரினால் ஐரோப்பிய மக்களின் இதயத்தில் ஒரு திறந்த, ஆறாத காயம் ஏற்பட்டுள்ளது.

சர்வதேச நாடுகளுக்கு இடையேயான சச்சரவுகள் அமைதியான வழிமுறையிலேயே தீர்க்கப்பட வேண்டும்.

உக்ரேனில் பலர் தங்கள் குழந்தைகளை எப்போது இழந்து விடுவோமோ என அச்சத்திலேயே வாழ்கின்றனர். ரஷ்ய வீரர்களும் இப்போரினால் உயிரிழக்கின்றனர். இரண்டு வருடங்களாகப் பலர் பல துன்பங்களை அனுபவிப்பதைப் பார்த்து விட்டோம். போதும். சர்வதேச சட்டங்களின்படி அமைதி ஏற்படுத்த இதுவே சரியான தருணம்" என தெரிவித்துள்ளார்.

பிரேசில்

# உலகின் மிகப்பெரிய அனகோண்டா பாம்பு



உலகின் மிகப்பெரிய தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் இருப்பிடமான அமேசான் மலைக்காடுகளில், விஞ்ஞானிகள் நடத்தி வரும் ஆய்வில் புதுப் புது தகவல்கள் வெளியாகி வருகிறது.

இந்நிலையில் அமேசான் காட்டில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் விஞ்ஞானிகளில் ஒருவரான ப்ரீக் வோங்க், தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் மிகப்பெரிய அனகோண்டா பாம்பின் வீடியோவை பகிர்ந்துள்ளார்.

அதில் நீருக்கு அடியில் சுமார் 26 அடி நீளம் கொண்ட அனகோண்டாவின் தலை முதல் வால் வரை காட்டுகிறார்.

அதனுடன், "நான் பார்த்த மிகப்பெரிய அனகோண்டாவை வீடியோவில் நீங்கள் பார்க்கலாம். ஒரு கார் டயரைப் போன்ற தடிமன், சுமார் 8 மீட்டர் நீளம் மற்றும் 200 கிலோவுக்கு மேல் எடை மற்றும் பெரிய தலையுடன் காணப்படுகிறது. நான் இதற்கு முன்பு ஒரு பெரிய இனத்தைக் கண்டுபிடித்தேன். அது அவுஸ்திரேலியாவில் இருந்து வந்த ஒரு சிறிய பாம்பு. ஆனால், இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருப்பது உலகிலேயே மிகப்பெரிய பாம்பு" என தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கெதிரான




# தொடரைக் கைப்பற்றிய இந்தியா

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா கைப்பற்றியுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இங்கிலாந்தும், அடுத்த இரண்டு போட்டிகளையும் இந்தியாவும் வென்ற நிலையில், ராஞ்சியில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து நேற்று முடிவுக்கு வந்த நான்காவது போட்டியை இந்தியா வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இங்கிலாந்து: 353/10 (துடுப்பாட்டம்: ஜோ றூட் ஆ.இ 122, ஒலி றொபின்ஸன் 58, பென் போக்ஸ் 47, ஸக் குறோலி 42, ஜொனி பெயார்ஸ்டோ 38 ஓட்டங்கள். பந்துவீச்சு: இரவீந்திர ஜடேஜா 4/67, ஆகாஷ் டீப் 3/83, மொஹமட் சிராஜ் 2/78, இரவிச்சந்திரன் அஷ்வின் 1/83)

இந்தியா: 307/10 (துடுப்பாட்டம்: துருவ் ஜுரேல் 90, யஷஸ்வி ஜைஸ்வால் 73, குல்தீப் யாதவ் 28 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷொய்ப் பஷிர் 5/119, டொம் ஹாட்லி 3/68, ஜேம்ஸ் அன்டர்சன் 2/48)

இங்கிலாந்து: 145/10 (துடுப்பாட்டம்: ஸக் குறோலி 60, ஜொனி பெயார்ஸ்டோ 30 ஓட்டங்கள். பந்துவீச்சு: இரவிச்சந்திரன் அஷ்வின் 5/51, குல்தீப் யாதவ் 4/22, இரவீந்திர ஜடேஜா 1/56)

இந்தியா: 192/5 (துடுப்பாட்டம்: றோஹித் ஷர்மா 55, ஷுப்மன் கில் ஆ.இ 52, துருவ் ஜுரேல் ஆ.இ 39, யஷஸ்வி ஜைஸ்வால் 37 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷொய்ப் பஷிர் 3/79, ஜோ றூட் 1/26, டொம் ஹாட்லி 1/70)

போட்டியின் நாயகன்: துருவ் ஜுரேல்




ஈ.எஃப்.எல் கிண்ணத் தொடர்:

# செல்சியை வென்று சம்பியனான லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான இங்கிலாந்து கால்பந்தாட்ட லீக் கிண்ணத் தொடரில் லிவர்பூல் சம்பியனாகியது. நேற்று முன்தினமிரவு நடைபெற்ற செல்சியுடனான இறுதிப் போட்டியில் மேலதிக நேரத்தில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே லிவர்பூல் சம்பியனாகியது.

லிவர்பூல் சார்பாகப் பெறப்பட்ட கோலை வேர்ஜில் வான் டிஜிக் பெற்றிருந்தார்.

மைலோ புட்போல் சம்ப்ஸ் 2024– வட மாகாணத்தின்

# மன்னாரில் சம்பியனாகிய சென். ஸ்கேவியர் கல்லூரி

மைலோ புட்போல் சம்ப்ஸ் 2024 - வட மாகாணத் தொடரின் மன்னார் மாவட்டத்துக்கான தகுதிகாண் போட்டிகளில் 10, 12 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தொடரில் சென். ஸ்கேவியர் ஆண்கள் கல்லூரி சம்பியனாகியது.

12 வயதுக்கு உட்பட்டோருக்கான தொடரின் இறுதிப் போட்டியில் தூய ஜோசப்வாஸ் மகா வித்தியாலயத்தை வென்றே ஸ்கேவியர் சம்பியனானதுடன், மூன்றாமிடத்துக்கான போட்டியில் சென். அனே கல்லூரியை வென்று லூர்சியா மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தைப் பெற்றது.

10 வயதுக்குட்பட்டோருக்கான தொடரில் இலுப்பைக்கடவை தமிழ் மகா வித்தியாலயத்தை வென்று ஸ்கேவியர் சம்பியனானதுடன், மூன்றாமிடத்துக்கான போட்டியில் சித்திவிநாயகர் கல்லூரியை வென்று அரிப்பு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மூன்றாமிடத்தைப் பெற்றது.

12 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தொடரில் வட்டக்கண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை வென்று இலுப்பைக்கடவை தமிழ் மகா வித்தியாலயம் சம்பியனானதுடன், மூன்றாமிடத்துக்கான போட்டியில் கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தை வென்று சென். ஸ்கேவியர் பெண்கள் கல்லூரி மூன்றாமிடத்தைப் பெற்றது.



ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# செவிய்யாவை வென்ற றியல் மட்ரிட்

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற செவிய்யாவுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் றியல் மட்ரிட் வென்றது.

மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட கோலை லூகா மோட்ரிச் பெற்றார்.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 65 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் றியல் மட்ரிட் உள்ளது.

57 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்பு சம்பியன்களான பார்சிலோனாவும், 56 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் ஜிரோனாவும், 52 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அத்லெட்டிகோ மட்ரிட்டும் உள்ளன. இதில் ஜிரோனா ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் செவ்வாய்க்கிழமை, 27 பெப்ரவரி 2024, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.